# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 28/2022 Date:28.04.2026.**

**(PW2)- ராஜாமோகன்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

1. நேசமணி என்பவர் எனது தம்பி என்றால் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஜெகன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். ஜெகன் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் தூரத்து உறவு முறை தம்பி ஆவார். தாவா சொத்தை நானும் எனது அண்ணனும் காந்திமதிபாய் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி கிரய பத்திரம் இரணியல் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 584/1989 மற்றும் 586/1989 ஆவணங்களாக தலா 3.75 செண்ட் சொத்தாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் ஆவணங்களின் எண் குறித்து எனக்கு தெரியாது. மேற்படி காந்திமதியிடம் இருந்து கிரயம் பெற்ற விபரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி தெரியாது.

2. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 1989 ஆம் வருடம் காந்திமதி பாயிடம் இருந்து கிரயம் பெற்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 1989 ஆம் வருட கிரய ஆவணங்களில் வழிப்பாதை குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வருட ஆவணங்களில் வழிப்பாதை குறித்து எந்த விபரமும் சொல்லப்படாததால் நான் மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தென் கிழக்கு மூலையில் பட்டிகை சொத்தை அடைவதற்கு 2018 வருடம் சாந்தகுமாரி மற்றும் 3 நபர்களிடம் இருந்து பாதைகாக சொத்து கிரயம் பெற்று வாதி மேற்படி வழிப்பாதையை பயன்படுத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி வாதி கிரயம் பெற்ற சொத்தின் வழியாகதான் மின் இணைப்புகள் எடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழிப்பாதை பஞ்சாயத்து கான்கீரிட் பொது பாதையில் இருந்து தொடங்கி பட்டிகை சொத்தில் முடிவடைகிறது என்றால் அது பற்றி தெரியாது. நான் தாவா அமைந்துள்ள ஊரில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் உண்மை விபரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஸ்தலத்தில் இல்லாதா  பாதையை உருவாக்கவேண்டி இருக்கின்ற வழிப்பாதையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**